மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆனால் மேஜையைத் தட்டுவதைப் பொறுத்தவரையில், இதுவரைக்கும் தட்டியதைப் போல் தட்டவில்லை. அதற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்கிறேன்.

இரவு 9-20

(ஈ) கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண். 28, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.71,38,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் "

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கூட்டுறவுச் சங்கத்திறுடைய தனி அதிகாரிகளின் நியமனத்தைக் கூட்டிக்கொண்டே போவது என்பது ஜனநாயக முறைப்படி அந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இல்லை என்பதைக் காட்டுகிறது. ஆகவே தொடர்ந்து இப்படி தனி அதிகாரிகளின் நியமனத்தை நீட்டிக்கின்ற இந்தச் சட்டம் கொண்டுவருவதை நான் ஆட்சேபித்து வெளிநடப்பு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், திரு. வே. தம்புசாமி வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகத்தான் இவ்வளவு நேரமாக உட்கார்ந்துகொண்டிருந்தீர்களா ? (சிரிப்பு) திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை அவர்கள் இதுவரையில் இந்த மாமன்றத்தில் சொன்ன காரணங்களை முன்னிட்டு, வழக்குகள் கோர்ட்டிலே இருக்கின்ற காரணத்தினாலே இந்தச் சட்டத்திலே கூட்டுறவுச் சங்கங்களுடைய ஸ்பெஷல் ஆபிசர் பதவியை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, நிர்வாக சவுகர்யத்தை முன்னிட்டு நீட்டிக்கின்ற இந்தச் சட்டத்தை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஏதோ காரணத்தைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அதற்கு ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா ? அப்படியிருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட காரணத்தாலே அதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்புச் செய்தாலும் ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டுத்தான் வெளிநடப்புச் செய்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பல முறை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். நீதிமன்றங்களில் வழக்குகள் இருக்கின்ற காரணத்தினாலே, அதாவது ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெற்றால்தான் அடுத்தபடியாக அதற்கு மேலேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அதற்கு மேலேயிருக்கின்ற மூன்றாவது தட்டிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடைபெறமுடியும். ஆகவே ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் முடிகின்ற வரையில் மேல் மட்டங்களிலே இருக்கின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தலை நடத்த முடியாது. ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தவேண்டுமென்றால், நீதிமன்றங்களிலே இருக்கின்ற வழக்குகள் முடிவு பெற வேண்டும். அந்த வழக்குகள் அங்கே நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அதுவரையிலே தடையாணை இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலேயே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த தடையாணைகள் உடைக்கப்படுகின்ற வரையிலே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறுகின்ற வாய்ப்பில்லை. என்றாலும் இந்த அரசைப் பொறுத்தமட்டிலே எந்த நேரத்திலும் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். எந்தவிதமான நிலைமையிலும் இந்தத் தேர்தல் நடப்பதற்கு நாங்கள் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நீதிமன்றங்களிலே அதற்கான எல்லாவிதமான மனுக்களையும் போட்டு அந்தத் தடையாணைகளை சீக்கிரமாக விடுவிப்பதற்கான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

இரவு 9.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1995) நிறைவேற்றப்பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-4-1995) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 9-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

117. 1993-94-ஆம் ஆண்டு தமிழ்நாடு சாரிகை லிமிடெட்டின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

144. கோரிக்கை எண் 29 - சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

145. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (ஆங்கிலம்)

146. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (ஆங்கிலம்).

147. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிப் பற்றிய ஆய்வு மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ்).